**Launching of E-net for Fisheries and Fishermen welfare Online Registration and Tracking System (EFFORTS)**

The web portal, E-net for Fisheries and Fishermen welfare Online Registration and Tracking System (EFFORTS), designed and developed by National Informatics Centre Puducherry, for the Department of Fisheries and Fishermen Welfare, was officially launched by Honourable Lieutenant Governor Shri. K. Kailashnathan on 14/12/2024.

Shri. A. Nedunchezhiyan, I.A.S., the Secretary to Government of Puducherry (Fisheries) had welcomed the august gathering and highlighted the efforts taken in bringing the portal for the benefits of Fishermen and enrolling for various welfare schemes. Shri. K. Lakshminarayanan, Honourable Minister for Fisheries, Government of Puducherry had highlighted the importance of Portal and elaborated the amount disbursed under various welfare schemes and timely disbursement of benefits to the fishermen. He also informed the gathering that the portal will help the fishermen to enrol various schemes in online mode and there is no need of manual collection of forms for enrolling. Shri. N. Rangasamy, Honourable Chief Minister of Puducherry had briefly explained the efforts of Government in implementing various schemes for fishermen community and efforts in extending to newer avenues.

Shri. R. Selvam, Honourable Speaker, Shri. A. Namassivayam, Honourable Minister for Home and Honourable MLAs and Secretaries to Government of Puducherry were also present during the launch event.

Shri. A. Mohamad Ismail, Director of Fisheries and Fishermen Welfare, Government of Puducherry had thanked all the officials present during the event and expressed his gratitude to all the Department officials for organising and praised their contribution in making the launch event success.

The portal, which is web and workflow based, takes care of Registration of Fishermen, enrolling for various welfare schemes, verification and approval mechanism. The application takes care of updating Co-operative Society, Personal, professional, family member details and all welfare related details. Once the basic details of fishermen are made available in the portal, enrolling or exclusion for various welfare schemes, depending on the eligibility criteria, becomes a simplified process, which avoids the collection of manual forms / making fresh entry and processing of application.






# L-G hails the contribution of fishermen to India's economy

**The Hindu Bureau**
PUDUCHERRY

Lieutenant Governor K. Kailashnathan hailed the contribution of fishermen to the country's economy.

Inaugurating e-Net for Fisheries and Fishermen Welfare Online Registration and Tracking System (EFFORTS) on Saturday, the Lt. Governor said fishermen play a huge role in the socio-economic development of the country. India is the sixth largest producer of fish in the world. The community was contributing immensely to the economic activity of Puducherry, the Lt. Governor added.



Lieutenant Governor K. Kailashnathan inaugurating e-Net for Fisheries and Fishermen Welfare Online Registration and Tracking System (EFFORTS) in Puducherry on Saturday.

Mr. Kailashnathan said the government was aware of the issues of safety and livelihood faced by the community.

Steps were being taken to improve the means of livelihood and living conditions of fishermen in the Union Territory, he further added.

In his address, Chief Minister N. Rangasamy said there were plans to provide free education for children of fishermen in higher education courses. As the government was already providing financial assistance to SC and ST students for pursuing higher education, a similar scheme was being considered for students belonging to the fishermen community. The government was taking steps to address the problem of sea erosion in coastal areas, the Chief Minister said.

Mr. Rangasamy said the free rice scheme would be renewed this month itself as promised. "The supply order has been issued and the distribution of free rice would begin in another 10 days," he added. EFFORTS is a web-based application designed and developed by the National Informatics Centre, Puducherry, for the fishermen to register online and apply for various benefits provided by the Puducherry administration and the Central government.

The portal would provide all details about various welfare schemes available for the fishermen.

Speaker R. Selvam, Home Minister A. Namassivayam, Minister for Public Works K. Lakshminarayanan, legislators and officials attended the event.

4 CHENNAI
ஞாயிறு, டிசம்பர் 15, 2024

ஊர்வலம்

# கடல் உணவு தொழிலில் வளர்ச்சி பெற்று சர்வதேச சந்தைக்கு புதுச்சேரி நகர வேண்டும்

## துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் விருப்பம்



புதுச்சேரி மீன்வளத்துறை சார்பில் மீனவர்களுக்கான நலத்திட்டங்கள் வழங்கும் விழாவில், மீனவர் நலன் செயலியை அறிமுகப்படுத்திய துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன். உடன் முதல்வர் ரங்கசாமி, உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், அமைச்சர் லட்சுமிநாராயணன் உள்ளிட்டோர். படம்: எம்.சாம்ராஜ்

புதுச்சேரி

புதுச்சேரி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில், மீனவர் நலனுக்கான மீன்வளத் துறையின் இணையதள செயலியை (EFFORTS) அறிமுகப் படுத்தும் விழா மற்றும் மீனவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா காமராஜர் மணி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி ஆகியோர் கலந்துகொண்டு, மீன்வளத்துறையின் இணையதள செயலியை அறிமுகப்படுத்தினர். தொடர்ந்து, மீனவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

விழாவில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் பேசியதாவது:

உலக அளவில் மீன் உற்பத்தியில் இந்தியா 6-வது இடத்தில் இருக்கிறது. மீனவர்கள் புதுச்சேரியின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறப்பான பங்கு ஆற்றுகின்றனர். மீன்பிடிக்கும் தொழில் மற்றும் மீனவரின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் கவனம் செலுத்துகின்றன. பிரதமர் மோடியின் 'வளர்ச்சி அடைந்த பாரதம்' திட்டத்தின் கீழ், 'டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி' என்ற இலக்கோடு நாடு வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில் பதப்படுத்தப்பட்ட உணவு, உலர்ந்த கடல் உணவு போன்ற தொழில்கள் மூலமாக மீன்பிடித்தொழிலில் நாம் உள்ளூர் சந்தையில் இருந்து சர்வதேச சந்தைக்கு நகர வேண்டும். புதுச்சேரியில் கடல் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அதிகம் வரவேண்டும். புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் 14 இடங்களில் மத்திய அரசின் நிதி உதவியோடு ரூ.4.34 கோடி செலவில் செயற்கைபாறைகள் அமைக்க பணி ஆணைகள் வழங்கப்பட்டு இருக்கிறது. என்று தெரிவித்தார்.

முதல்வர் ரங்கசாமி பேசும் போது, "மீனவ சமுதாய குழந்தைகள் தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண் எடுத்தாலே கல்வி உதவித்தொகை வழங்குகிறோம்.

அட்டவணை இன மக்களின் குழந்தைகள் கல்விக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்கும் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது. இதேபோல், மீனவ சமுதாய குழந்தைகளின் உயர்க்கல்வி கட்டணத்தையும் அரசே முழுமையாக ஏற்கும் திட்டத்தை செயல்படுத்த உள்ளது" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பேசிய அமைச்சர் லட்சுமிநாராயணன், "மீன்பிடி தடைக்கால நிவாரண நிதியை ரூ.8 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று கடந்த பட்ஜெட்டில் முதல்வர் அறிவித்தார். அதன்படி, தடைக்கால நிவாரணத்தை உயர்த்தி கொடுப்பதற்கான ஆணையை முதல்வர் அளித்துள்ளார். இன்னும் சில நாட்களில் துணைநிலை ஆளுநர் ஒப்புதலோடு மீன்பிடி தடைக்கால நிவாரணம் ரூ.8 ஆயிரமாக உயர்த்தி கொடுப்பதற்கான அறிவிப்பு வெளியாகும்" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புதுச்சேரி தலைமைச் செயலர் சரத் சவுகான், மீன்வளத்துறை இயக்குநர் முகம்மது இஸ்மாயில், துணைநிலை ஆளுநரின் செயலர் மற்றும் மீன்வளத்துறை செயலர் ஏ.நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி



மீனவர்களுக்கான நலத்திட்ட உதவிக்கான மாதிரி காசோலையை கவர்னர் கைலாஷ்நாதன், முதல்-அமைச்சர் ரங்கசாமி வழங்கியபோது எடுத்த படம். அருகில் சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமிநாராயணன் ஆகியோர் உள்ளனர்.

# மீனவ மாணவர்களின் உயர்கல்வி கட்டணத்தை அரசே ஏற்கும்

## முதல்-அமைச்சர் ரங்கசாமி அறிவிப்பு

புதுச்சேரி, டிச.15-

மீனவ மாணவர்களின் உயர்கல்வி கட்டணத்தை அரசே ஏற்கும் என்று முதல்-அமைச்சர் ரங்கசாமி கூறினார்.

### நலத்திட்ட உதவிகள்

புதுச்சேரி அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மீன்வளத்துறையின் இணையதள செயலி அறிமுக விழா மற்றும் மீனவர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா நேற்று மாலை காமராஜர் மணி மண்டபத்தில் நடந்தது.

விழாவிற்கு முதல்-அமைச்சர் ரங்கசாமி தலைமை தாங்கினார். அமைச்சர் லட்சுமி நாராயணன் முன்னிலை வகித்தார். மீன்வளத்துறை செயலாளர் நெடுஞ்செழியன் வரவேற்று பேசினார். விழாவில் கவர்னர் கைலாஷ்நாதன் கலந்து கொண்டு புதிய இணையதள செயலியை தொடங்கி வைத்து பேசியதாவது:-

### உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை

மீனவர்கள் கடற்பரப்பை பாதுகாப்பதில் இடைவிடாத எல்லை பாதுகாப்பு படையாக செயல்படுகின்றனர். பெருமழை, புயல் காலங்களில் முதலில் பாதிக்கப்படுவது மீனவர்கள் தான். நாட்டின் பொருளாதார வளர்ச்சியோடு தொடர்பு கொண்டு இருக்கும் மீன்பிடிக்கும் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மத்திய, மாநில அரசுகள் கவனம் செலுத்தி வருகிறது.

சர்வதேச வணிகம் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் மீன்வளத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. பதப்படுத்த உணவு, உலர்ந்த கடல் உணவு போன்ற தொழில் மூலமாக மீன்பிடி தொழிலை நாம் உள்ளூர் சந்தையில் இருந்து சர்வதேச சந்தைக்கு செல்ல வேண்டும். புதுவையில் கடல் உணவை பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அதிகம் வர வேண்டும். புதுவை, காரைக்கால் பகுதிகளில் 14 இடங்களில் மத்திய அரசின் நிதி உதவியோடு ரூ.4 கோடியே 34 லட்சம் செலவில் செயற்கை பாறைகள் அமைக்க பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இது மீனவர்களுக்கு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### உயர்கல்வி கட்டணம்

விழாவில் முதல்-அமைச்சர் ரங்கசாமி பேசியதாவது:-

மக்களுடைய எண்ணங்களின் அடிப்படையில் அரசு செயல்படுகிறது. மீனவ சமுதாய மக்களுக்கு ஆண்டுக்கு ரூ.123 கோடிக்கு நிதி ஒதுக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவர்களுக்கான நிதியை அரசு ஆண்டுதோறும் உயர்த்தி வழங்கி வருகிறது. மீனவ சமுதாய மாணவர்கள் தேர்வில் 70 சதவீதத்துக்கு மேல் மதிப்பெண் எடுத்தால் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதனை 60 சதவீதமாக குறைத்துள்ளோம். ஆதிதிராவிட மாணவர்களுக்கு கல்வி கட்டணம் முழுவதையும் அரசே செலுத்துகிறது.

இதே போல் மீனவ சமுதாய மாணவர்களுக்கும் உயர்கல்வி கட்டணத்தை அரசே முழுமையாக ஏற்கும் திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இதன் மூலம் மீனவ சமுதாய பிள்ளைகள் நல்ல கல்வி பெற்று உயர வேண்டும். காலாப்பட்டு, பிள்ளைச்சாவடி பகுதிகளில் கடல் அரிப்பை தடுக்க நிதி ஒதுக்கி கற்கள் கொட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

### நலத்திட்ட உதவிகள்

விழாவில் சபாநாயகர் செல்வம், அமைச்சர் நமச்சிவாயம், எம்.எல்.ஏ.க்கள் கல்யாணசுந்தரம், பாஸ்கர் என்ற தட்சணாமூர்த்தி, அரசு செயலாளர் பங்கஜ்குமார் ஜா, மீன்வளத்துறை இயக்குனர் முகமது இஸ்மாயில், இணை இயக்குநர் தெய்வசிகாமணி மற்றும் அதிகாரிகள், மீனவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் மீனவர்களுக்கு ரூ.14 கோடியே 73 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

Dashboard, Generalised search option, Drill down options and provision of generating complete profile of the fishermen will help the department for verification and applicability for schemes as per the policy, generation of State and Central scheme wise reports are incorporated in the portal.

Honourable Lieutenant Governor had facilitated Shri. V. Gopi Swaminathan, SIO and Shri S. Arulraj, Senior Director (IT), NIC Puducherry and congratulated them for their good work and bringing out the portal EFFORTS for the Department of Fisheries and Fishermen Welfare.

***